# பாரதியார் பாடல்களில் ஆன்மீக சிந்தனை

*முனைவர் நா. சுதாலெட்சுமி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்
தூத்துக்குடி மாவட்டம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958709

### முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு இணையற்ற தமிழ் கவிஞராக மகாகவி பாரதியார் தமிழ் கவிதைக்கு ஒரு புதிய பரிணாமத்தை கொடுத்தவர். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, சமூகச் சிந்தனையாளர் .அந்த வகையில் தமது காலத்தில் ஆன்மீகச் சிந்தனைகளை வடிவமைத்து வழங்கிய பெருமக்கள் வரிசையில் மகாகவி பாரதியார் முன் நிற்கிறார்.

### பாரதியாரின் ஆன்மீக தளம்

மக்கள் கூட்டம் முழுவதையும் எவ்வித வேறுபாடு இன்றி மேன்மை பெறவும் தளைகளில் இருந்து விடுபடப் போராடி உரிமை பெற்றுச் சமமாக அச்சமின்றி வாழவும் உதவுவதாக ஆன்மீக சிந்தனைகளை முன் வைக்கிறார். தன் அனுபவம், தன் முன்னேற்றம் என்ற நிலையில் இருந்து ஜன சமுகம் முழுவதற்குமான மேன்மை என்பதான பரந்த அனுபவமாக, மக்கள் அனைவரின் முன்னேற்றமாக ஆன்மீகத்தை காட்டுவது அவருடைய சிந்தனை. மனிதனுக்கு அச்சத்தை நீக்கி கட்டுகளை எதிர்த்துப் போராடும் குணத்தையும் வாழ்க்கை பற்றிய நம்பிக்கையும் ஏற்படுத்துவதாக ஆன்மீக வளர்ச்சிக் கோட்பாட்டை மகாகவி விளக்குகிறார். வேதகால கவிஞர்களின் கவிதைகள் தந்த பக்தி, சமய சிந்தனைகளில் இருந்து அவர் காலத்திற்கு முன் வாழ்ந்த தத்துவராயர், தாயுமானவர், வள்ளலார், கோபாலகிருஷ்ண பாரதியார் வரையிலும் உள்ள பக்திக் கவிஞர்களின் தாக்கம் அவரிடம் உண்டு. நாட்டுப்புற சமயநெறி உள்ள சிந்தனைகளும் ஆதிசங்கரரின் அத்வைதமும் ராமானுஜரின் விசிட்டாத்துவைதமும் அவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவை அனைத்தும் உள்ள சாரத்தை உள்வாங்கி தன் காலச் சூழலுக்கு ஏற்ற முறையில் மனிதனுக்கு அச்சமின்றி நம்பிக்கை தருவதையும் விடுதலை பெற்று உரிமை சமத்துவமும் பெற்று வாழ்வதையும் முன் வைக்கிறார். அவ்வாறு மனிதனுக்கு உதவும் உறவுகளாக இறைவனை அவர் அடையாளம் காட்டுகிறார் .

***பாரதியின் ஆன்மீகப் பயணம்***

***பாரதியின் ஆன்மீகப் பயணமானது***
***தெளிவுறவே அறிந்திடல் தெளிவு தர***
***மொழிந்திடல் சிந்தித்துப் பார்க்க***
***களிவரை உள்ளத்தில் ஆனந்தக்***
***கனவு பல காட்டல் கண்ணீர்த்***
***துளிவர உள்ளுருக்குதல் இங்கு இவை எல்லாம்***

என ஒளி வளரும் தமிழ்வாணி அருளும் தொழில்கள் ஒருவகையில் தமக்கு தொழில் என்று பாரதியார் வகுத்துக் கொண்ட கவிதையின் இயங்கு நிலைகள் இதற்கான வழித்தடங்கள், செயற்களங்கள், அரசியலாக, ஆன்மிகமாக, இலக்கியமாக, சமுதாய சீர்திருத்தமாகப் பாரதியாரின் வாழ்வில் அமைந்திருந்தன. எல்லோருக்கும் எல்லாமும் என்பதான சமத்துவ விடுதலைச் சமுதாயத்தை கட்டமைக்கும் பணியில் இமைப்பொழுதும் சோர்வற்று இயங்கப் பாரதியார் பக்தியை துணையாகக் கொண்டார். பராசக்தியைத் தெய்வமாக போற்றினார். அத்தெய்வத்தை பெண்மையாகக் கண்டார். வாழ்வில் தாயாக, மனைவியாக, மகளாக, குழந்தையாக, வேலைக்கார பெண்ணாக வரும் அனைத்து பெண்மையும் சக்தி என்று தெரிந்தார். அதனை அனைவருக்கும் பிரகடனப்படுத்தினார். இயற்கையின் ஒவ்வொரு இயங்கு நிலையில் இருந்தும் தமக்கான ஆன்மீக உபதேசத்தை பெற்றுக் கொண்டவர் பாரதியார்.

இறைவன் இயல்புகளைக் கூறுவதில் பாரதியார் பழுத்த ஆன்மீகவாதியாக காணப்படுகிறார். ஆழ்வார் நாயன்மார்களுக்கும் அவருக்கும் இடையே இது பற்றிய வேறுபாடு இல்லை எனலாம்.

உலகம் முழுவதுமே கடவுள்மயமே. காக்கை சிறகிலும், பார்க்கும் மரத்திலும், கேட்கும் ஒலியிலும், கண்ணன் இருக்கிறான். காய்கறி, நோய், நோன்பு, காற்று, கனல், நெருப்பு, செறு, திக்கு ஆகிய எல்லாவற்றிலும் இரண்டற கலந்துள்ளான். இவ்வாறு கண்ணனை கண்ட பாரதி எங்கும் சிவனை காணடா என்று கூறுகின்றார். தன் உள்ளமெங்கும் சக்தி, சக்தி, சக்தி என்று கூத்தாட வைக்கின்றார். எனவே தான் பக்தி செய்வதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகின்றார்.

***பக்தியினாலே- இந்தப்***
***பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடி***
***சித்தம் தெளியும்-இங்கு***
**செய்கையனைத்தும்செம்மை பிறந்திடும்**

என்று பாடியுள்ளார். இடைக்காலத்தில் பக்தி நிலையில் இறைவனைப் போற்றி பாடிய பெரியோர்கள் எல்லாம் தமக்காகவே இறைவனைப் பல்வேறு நிலைகளில் போற்றிப் பரவினர். பாரதியார் அவ்வாறு இறைவனை துதித்து பாடுவதோடு நாடு வளம் பெற வேண்டும், விடுதலை பெற வேண்டும், வளர்ச்சியுற வேண்டும், இவ்வுலகில் மக்கள் இன்பம் காண வேண்டும் என்று துதிக்கிறார்.

அன்பை நம்மிடம் தந்து, அன்பை நம் உள்ளத்தினுள்ளே பெருக்கி அதன் மூலம் இறைவன் நம்மிடம் தொடர்பு கொண்டு நம்மைக் காத்தருளுகிறான் என்பதில் பாரதிக்கு அசையாது நம்பிக்கை இருந்தது. இதே கருத்தை தாயுமானவரும்

**அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த**
**இன்பப் பெருக்கே இறையே பராபரமே**

என்று சொல்லி வணங்குகிறார்.

இடைக்காலத்தில் வாழ்ந்த ஆழ்வார் நாயன்மார்கள் நாயகன் நாயகி பாவத்தை கையாண்டனர். பாரதியார் இப்பக்தி நிலையிலும் புரட்சி செய்து இறைவனைக் காதலியாகவும், உயிரை காதலனாகவும் எண்ணிப்பாடித் தொடங்கிவிட்டார். தெய்வத்தின் அருள் தனக்கு வேண்டும் என்பதில் பாரதி அசையாத நம்பிக்கை கொண்டு விட்டார். எனவே கண்ணம்மாவின் எழிலை வர்ணிக்கும் இடம் தோறும் கண்ணனை முதன்மைப்படுத்தி அருள் வேண்டி,

***எங்கள் கண்ணம்மாவின் விழிந்திர நீலப்பூ***
***சுட்டும் விழிச்சுடர்தான் -கண்ணம்மா***
***சூரிய சந்திரரோ***
***வட்டக் கரியவிழி -கண்ணம்மா***
***வானக் கருமைகொலோ***

என்ற வகையில் வர்ணிக்கின்றார்.

புதிய ஆத்திச்சூடியில் தெய்வம் பற்றி பேசும் இடத்து "தெய்வம் நீ என்று உணர் என்று சொல்லுவார். அதே நிலையினை கண்ணன்

பாட்டு பாடிய பாரதியார் அடைந்து விட்டார் என்று சொன்னால் மிகையாகாது. "கண்ணம்மா" பற்றிய பாரதியின் கவிதை, இறைவனோடு தன்னை ஒப்பிவிக்க தொடங்கிய பாரதியை கோடிட்டு காட்டுவதை,

**என்றும் இருக்க உளங்கொண்டாய்**
**இன்பத் தமிழ் முக்கிலக்கியமாய்**
**இன்றும் இருந்தால் செய்கின்றாய்**
**இறவாய் தமிழோடிருப்பாய் நீசு**

என்று பாடிய பாரதியின் கவிதை வரிகளே சுட்டிக் காட்டுகிறது.

### தெய்வக் காதல்

தெய்வங்களின் மீது அதிகம் பற்று உடையவர். சரஸ்வதி, லட்சுமி, காளி ஆகியோரைத் தெய்வங்களாக பார்த்ததோடு மட்டுமல்லாமல் தமது காதலி ஆகவே எண்ணி அவர்களோடு இணைந்து இன்பம் அனுபவிக்கும் உடல் இன்பம் பற்றியும் தயக்கம் இன்றி பேசுகின்றார். லெட்சுமியைப் பாடும் போது

**"மலரின் மேவு திருவேரு- உன்மேல்**
**மையல் பொங்கி நின்றேன்**
**என்னுரைப்பானேட- திருவே**
**என்னுயிர்க் கோரமுதே**
**நின்னை மார்பு சேர - தழுவி நிகரிலாது வாழ்வேன்சு**

என்றும் உருகிப் பாடுகிறார்.

### காளி வழிபாடு

பாரதி தம்மை காளிக்கு முற்றுமாக அர்ப்பணித்துக் கொள்கிறார்.

**"சிந்தனை தெளிந்தேன் இனி யுன்றேன்**
**திருவருட்கெனை அர்ப்பணம் செய்தேன்**
**வந்திருந்து பல பயனாகும்**
**வகை தெரிந்து கொள்வாழியடி நீ"**

காளியே, அன்பு வடிவாகி நிற்பவள். துன்பமெல்லாம் அவள் இழைப்பவள். ஆக்கமும் நீக்கமும் யாவும் அவள் செய்கை என்று காளியின் புகழ் பேசுவார். சக்தியை பாடினால் வல்லமை தந்து விடுவாள்.

### சக்தி வழிபாடு

**"சொல்லுக் கடங்காவே**
**பராசக்தி சூரத்தனங் ளெல்லாம்**
**வல்லமை தந்திடுவாள் பராசக்தி**
**வாழிய வென்ற துதிப்போம்"**

அந்த சக்தியை வாழ்த்துவோம் என்று அவள் பாதமே சரணம் என்று புகுந்து விட்டால் முக்தி நிலை கிட்டும்.

**நெஞ்சுக்கு நீதியும் தோலுக்கு வாளும்**
**நிறைந்த சுடர் மணிப்பூண்**
**பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம்- இவள்**
**பார்வைக்கு நேர் பெருந்தீ**

நேர்மையும் வீரமும் கொண்டவள். இவன் முன்பே துன்பங்கள் தீயின் முன் பஞ்சாய் எரிந்து போகும். அத்தகு வல்லமை படைத்தவள் என்கிறார்.

### தேசிய உணர்வு

நாடு விடுதலை அடைவதற்கு முன்பே பாரதியார் சுதந்திரத்தைப் பற்றியும் மக்களின் சமத்துவத்தைப் பற்றியும் முழக்கமிட தொடங்கியவர். தேசிய விடுதலையை முழுமூச்சாக கொண்டவர். மனிதநேயமிக்கவராகவும் மக்களை எவ்வித வேறுபாடு இன்றி நேசித்தவராகவும் விளங்கியவர். பாரதியின் சொல்லும் செயலும் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என எண்ணி வழிகாட்டுவனாக இவருடைய கவிதைகள் அமைந்துள்ளன. இச்சமுதாயத்தில் சீர்கேடு களை வெறுத்து ஒதுக்கினார். ஜாதி மதங்களை பற்றி "வந்தே மாதரம்" என்ற பாடலில்

**ஜாதி மதங்களைப் பாருவோம் -உயர்**
**ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்**
**வேதியர் ஆயினும் ஒன்றே - அன்றி**
**வேறு குலத்தினராயினும் ஒன்றே"**

என்கிறார். அனைவரும் ஒன்றாக இருத்தல் வேண்டும். இருத்தல் மட்டுமே இந்த தேசத்தின் விடுதலையைப் பெற முடியும் என்று எண்ணியவர்.

### தேச விடுதலை

பாரத நாடு விடுதலை அடைய வேண்டும் என்று நோக்கில் பாடல்களை பாடி வீரமுழக்கம் செய்தவர் பாரதி. பாரத நாடு சுதந்திரம் அடைந்தால் தான் நாம் அடைகிற பெருமகிழ்ச்சி யை மனதில் கொண்டு

**"ஆடுவோமே பள்ளு பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று"**

என்று பாடி மகிழ்ந்தார். மேலும்

**"பறைய ருக்கும் இங்கு தீயர்**
**புலைய ருக்கும் விடுதலை !**
**பரவ லோடு குறவ ருக்கும்**
**மறவருக்கும் விடுதலை"**

என்று பாடி உள்ளம் பூரித்தவர். தேசிய விடுதலைக்காக தம் வாழ்நாள் முழுவதும் செலவிட்டவர். சுதந்திர உணவை அனைவருக்குள்ளும் ஏற்படுத்தியவர். அடிமை என்ற வார்த்தையை வேரோடு அழிக்கபாடுபட்டவர்.

**பாரதியின் இறைப்பற்று**

இந்து சமயத்தின் பால் அளவற்ற பற்று கொண்டவராக விளங்கியவர் பாரதி. இந்து சமயமானது தன்னுடைய பழைய தத்துவ கொள்கையுடன் உயிர்பிக்கப்பட்டால் இந்த மண்ணின் பெருமையும் உயர்வடையும் என்று பாரதி நம்பினார். விடுதலை மட்டுமே உயிர் மூச்சாகக் கொண்ட பாரதி இந்து சமயம் மறுமலர்ச்சி எனும் விருப்பத்தை தன்னுள்ளே கொண்டிருந்தார். இறை உணர்வு என்பது பாரதிக்கு ஒரு சமூக நோக்கமாகவே இருந்தது. சமுதாய நலனுக்காக அவர் இறைவுணர்வு மிக்க பாடல்களை எழுதினார். தெய்வ பக்தினால் நாம் நினைக்கும் அனைத்து செயல்பாடுகளையும் நிறைவேற்றி வாழ்வின் மேன்மைகளை ஒருசேர அடையலாம் என்பதை பாரதி சாதிகளை வெறுத்த அவர் சமயங்களை வெறுக்கவில்லை. இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என்ன மூன்று மத கடவுளரையும் பாரதி பாடல்களின் மூலம் அவரது மத சார்பின்மையை அறிய முடிகிறது.

**கடவுள் வாழ்த்து**

"ஆத்திச்சூடி அமர்ந்த தேவனை ஏத்தி தொழுதுவோம் யாமே' என்கிறார் அவ்வை. பாரதியோ,

**ஆத்திச்சூடி யிளம்பிறை யணிந்து**
**மோனத் திருக்கு மூழுவெண் மேனியான்**
**கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக்கிடைப்போன்**
**மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்**
**இயேசுவின் தந்தை யெனப் பல மதத்தினர்**
**உருவகத்தாலே உணர்ந்துண ராது**
**பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்**
**ஒன்றே அதனியல் ஒளியுறு மறிவோம்**
**அதனிலே கண்டார் அல்லலை அகற்றினார்**
**அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்**

பாரதியோ சிவன், விஷ்ணு, முஹம்மது நபி, ஏசு என அனைவரும் பரம்பொருளின் பல உருவங்கள் என்று குழந்தைகள் நெஞ்சில் மனநல்லிணக்கத்தை விதைத்தார். கடவுள் வாழ்த்திலே சைவ சமயத்தை போற்றி அவ்வை நூலின் உள்ளே திருமாலுக்கு அடிமை செய் என்ற வைணவத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் பாரதியோ தன் காலத்திலே இணைத்தோரட அல்லாமல் நூலில் உள்ளே தெய்வம் நீ என்று உணர் என்று கூறி ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கடவுள் உள்ளார் என்ற புதிய தத்துவத்தை முன்மொழிந்து உள்ளார்.

**முடிவுரை**

இருபதாம் நூற்றாண்டு சூழலில் மேற்கத்திய தாக்கத்தின் காரணமாக நம் வாழ்க்கை முறையில் மட்டுமல்ல கவிதைகள் குறித்த பார்வையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வகையில் பல மாற்றங்களை ஏற்படுத்தி நம் பாரதிக்கு முதல் வணக்கத்தை தெரிவித்து அவர்தான் பாடல்களில் பக்தி சுவையை நனை சொட்ட சொட்ட வடிவத்துள்ள தன்மையை அறிந்து கொள்ள முடிகிறது. இவை சமுதாயத்தில் சி றப்புடன் அமைந்தால் நாமும் அதை நலமுடன் ஏற்றுக்கொண்டு வாழலாம்.இறை சக்தியை கொணர்ந்து தானே அப்பொருளின் இயக்கமாக மாறி எங்கும் அப்பொருள் இயங்க சக்தியை கண்டறிந்த பாரதி சித்தர்களின் மேலானவராக புதிய தெய்வ தத்துவத்தை எளிய நடையில் உணர்த்தியுள்ளார். ஆழ்வார், நாயன்மார் பக்தி இலக்கியம் பரப்பிய மேற்கொண்ட நெறிகளையே பாரதியார் தேசிய விடுதலைக்கு மேற்கொண்டு உள்ளார். பாரதி தெளிந்த தத்துவ ஞானச் செழுமையுடன் தனது சமூக பங்களிப்பை முன்வந்து செய்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது.